தினமலர்
உண்மையின் உரைகல்

# இந்தியாவின் இயற்கை ரப்பர் உற்பத்தி 9.44 லட்சம் டன்னாக இருக்கும்

டிசம்பர் 03,2011,01:19



கொச்சி:வரும் 2012ம் ஆண்டில், இந்தியாவின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 9.44 லட்சம் டன்னாக இருக்கும் என, மத்திய அரசின் மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, நடப்பு 2011ம் ஆண்டில், 9.01 லட்சம் டன்னாக இருக்கும் என தெரிகிறது.அதேசமயம், இயற்கை ரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பின் மதிப்பீட்டின் படி, நடப்பு 2011ம் ஆண்டை விட, வரும் 2012ம் ஆண்டில் ரப்பர் உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, நடப்பாண்டில், ரப்பர் உற்பத்தி வளர்ச்சி, 5.8 சதவீதமாகவும், இது வரும் ஆண்டில், 4.8 சதவீதமாகவும் இருக்கும் என, இந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவிலும், வரும் 2012ம் ஆண்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி வளர்ச்சி குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் 2012ம் ஆண்டில், உலகளவில், ரப்பர் உற்பத்தி, 1.04 கோடி டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இது, 3.6 சதவீத வளர்ச்சியாகும். அதேசமயம், நடப்பாண்டில், சர்வதேச அளவில் ரப்பர் உற்பத்தி, 1 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு உற்பத்தி வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, 5.6 சதவீத உயர்வாகும். இதே ஆண்டுகளில், உலகளவில், ரப்பர் பயன்பாடு, தற்போதைய, 60.90 லட்சம் டன்னிலிருந்து, 62.80 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக, ரப்பர் பயன்பாடு, 0.8 சதவீதம் என்ற அளவிலிருந்து, 3.1 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஏற்றுமதி:நடப்பு 2011ம் ஆண்டில், இந்தியாவின் ரப்பர் ஏற்றுமதி, 57 ஆயிரம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டு 21 ஆயிரத்து, 700 டன்னாக இருந்தது. வரும் 2012ம் ஆண்டில், நாட்டின் ரப்பர் ஏற்றுமதி, 40 ஆயிரம் டன் என்ற அளவில் தான் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.அதேசமயம், சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 74.70 லட்சம் டன்னிலிருந்து, 75.70 லட்சம் டன்னாக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இது, வரும் 2012ம் ஆண்டில், 78.10 லட்சம் டன்னாக இருக்கும்.

இறக்குமதி: சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் இறக்குமதி, நடப்பாண்டில், 37.60 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டின் இறக்குமதியை விட, 1 சதவீதம் (38 லட்சம் டன்) குறைவாகும்.இருப்பினும், 2012ம் ஆண்டில் சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் இறக்குமதி, 1.5 சதவீதம் அதிகரித்து, 38.20 லட்சம் டன்னாக இருக்கும் என தெரிகிறது.வரும் 2012ம் ஆண்டின் தொடக்கத்தில், உள்நாட்டில் ரப்பர் கையிருப்பு, 3.55 லட்சம் டன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது, நடப்பாண்டின் தொடக்கத்தில், 3.36 லட்சம் டன்னாக இருந்தது.கடந்த ஆண்டின் தொடக்கத்தில், நாட்டின் ரப்பர் கையிருப்பு, 3.15 லட்சம் டன்னாக இருந்தது. இந்தியாவின், மொத்த ரப்பர் உற்பத்தியில், 90 சதவீத உற்பத்தி சிறிய விவசாயிகளால் மேற்கொள்ளப்படுகிறது. உள்நாட்டில் மாதம் ஒன்றிற்கு சாரசரியாக, 80 ஆயிரம் டன் என்ற அளவில் ரப்பர் பயன்பாடு உள்ளது.

சர்வதேச நிலவரம்:சர்வதேச அளவில், வளர்ச்சியடைந்த நாடுகளில் பொருளாதார சுணக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், ரப்பர் பயன்பாடும், இதன் விலையும் அதிகரிக்க வாய்ப்பில்லை. இந்நிலையில், சீனாவில், ரப்பர் கையிருப்பு அதிகமாக உள்ளது.எனவே, அதிகளவில் ரப்பர் உற்பத்தி செய்து வரும், மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் ரப்பர் ஏற்றுமதி குறைய வாய்ப்புள்ளதாக ரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில்,பொருளாதார சுணக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்,ரப்பர் பயன்பாடும், இதன்விலையும் அதிகரிக்கவாய்ப்பில்லை.

**கால்நடை துறையில் 900 டாக்டர் நியமனம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2011,02:53 IST

நாமக்கல்:""கால்நடை டாக்டர்கள் தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் புதிதாக, 900 கால்நடை டாக்டர்கள் நியமிக்கப்பட உள்ளனர்,'' என, நாமக்கல்லில் நடந்த விழாவில், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் சின்னையா பேசினார்.நாமக்கல் கால்நடை

மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், செயல்திறன் மேம்பாடு மற்றும் சுயவேலைவாய்ப்பு பயிற்சி துவக்க விழா நடந்தது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணைவேந்தர் பிரபாகரன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சந்திரகாசன் வரவேற்றார். செயல்திறன் மேம்பாடு மற்றும் சுயவேலைவாய்ப்பு பயிற்சிகளை, கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் சின்னையா துவக்கி வைத்து பேசியதாவது:நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்கி, 25 ஆண்டுகளான போதும், அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதுசம்மந்தமாக முதல்வரிடம் வலியுறுத்துவோம். இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டம், இந்தியாவில் எங்கும் இல்லாத திட்டமாகும். ஒரு கறவை மாடு பெண்ணிடம் வழங்கினால், அதன் மூலம் அவரது குடும்பத்தின் வாழ்வாதரத்தை உயர்த்திக் கொள்வார்.
இலவச மாடு வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் மூலம், அந்தந்த ஊரில் செயல்படும் மாட்டுச் சந்தையில் மாடுகள் தேர்வு செய்யப்படுகின்றன. மாடுகள் வாங்கும் தொகையில் மீதம் ஏற்பட்டால், அவை பயனாளிகளுக்கே வழங்கப்படும். கால்நடை டாக்டர்கள் தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் கால்நடைதுறையில் புதிதாக, 900 டாக்டர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.நாமக்கல்லில் மட்டும், 550 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இக்கல்லூரி மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு மட்டுமின்றி கோழிப் பண்ணைகளுக்காக ஆராய்ச்சி, நோய் கட்டுப்பாட்டு மேம்பாடு போன்ற பல்வேறு சேவைகளை செய்து வருகிறது.

தவிர, நாமக்கல் - திருச்சி சாலையில், 24 மணி நேரம் செயல்படும் மருத்துவமனை அமைத்து பல்வேறு சேவை செய்யப்படுகிறது.இம்மருத்துவமனை மேலும் விரிவுபடுத்த, முதல்வருக்கு குறிப்பு எழுதப்படும். இதுதவிர, திருநெல்வேலி, தஞ்சை ஆகிய இரு மாவட்டங்களில் இரு கால்நடை மருத்துவக் கலலூரிகள் துவங்கப்படும் என, முதல்வர் அறிவித்துள்ளார். மீன் வளர்ப்பு பல்கலை துவங்கும் திட்டமும் உள்ளது. ஏழை, பள்ளி மாணவ, மாணவியருக்கு லேப்டாப் மட்டுமின்றி ஜாமின்டரி பாக்ஸ், கலர் பெண்சில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.முன்னதாக பயிற்சி முகாமை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த கால்நடை சம்மந்தப்பட்ட கண்காட்சியை, அமைச்சர் சின்னையா பார்வையிட்டார். மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் அறவியல்சார் பன்றி வளர்ப்பு குறித்த சி.டி., வெளியிட்டார். சட்டசபை துணை சபாநாயகர் தனபால், கோழி, காடைக் குஞ்சுகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.முன்னோடி விவசாயிகளுக்கு கறி முயல்களை, வருவாய்துறை அமைச்சர் தங்கமணி பயனாளிகளுக்கு வழங்கினார். எம்.எல்.ஏ., பாஸ்கர், நகராட்சி சேர்மன் கரிகாலன், மோகனூர் யூனியன் சேர்மன் சிவசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

**முருங்கை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி சீஸன் நிறைவால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2011,02:49 IST

காங்கேயம்: முருங்கைக்காய் சீஸன் முடிந்து, விலை உயர்ந்ததால், காங்கேயம் சுற்றுப்பகுதியில் முருங்கை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
காங்கேயம் அருகே பாப்பினி முருங்கை கரும்பச்சை நிறத்தில் நீளமானதாக, சுவையாக இருக்கும். நீளமானது. மூலனூர் முருங்கை இளம் பச்சை நிறத்தில் குட்டையானது. டிசம்பர், ஜனவரி மாதங்கள் தவிர பத்து மாதங்களும் முருங்கை அதிகளவு காய்க்கிறது.காங்கேயத்திலிருந்து வாரந்தோறும் ஒட்டன்சத்திரத்துக்கு, 30 முதல் 40 டன் வரை முருங்கைக்காய் ஏற்றுமதியாகிறது. டிசம்பர் மாதத்துக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், முருங்கை உற்பத்தி குறைந்துள்ளது. திங்கள் தோறும் காங்கேயம் சந்தைக்கு கொடுமுடி, முத்தூர், பாப்பினி, வெள்ளக்கோவில் ஆகிய பகுதிகளிலிருந்து முருங்கை காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

நேற்று நடந்த சந்தையில், பத்து டன் வரை முருங்கை விற்பனைக்கு வந்தது. வரத்து குறைந்ததால், ஒரு கிலோ, 20 முதல் 25 ரூபாய் வரை வியாபாரிகள் வாங்கினர். விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பாப்பினி வியாபாரி தங்கவேல் கூறியதாவது: சீஸன் காலங்களில் கிலோவுக்கு பத்து முதல் 15 ரூபாய் வரைதான் விலை கிடைக்கும். சீஸன் இல்லாத இந்த இரண்டு மாதங்களில் உற்பத்தி குறைவால் விலை அதிகமாக இருக்கும். இங்கிருந்து, 80 கிலோ மூட்டையாக ஏற்றுமதி செய்கிறோம். இந்த வாரம் பத்து டன் முருங்கைதான் ஏற்றுமதியானது. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பாப்பினி ரக முருங்கைக்கு அதிக வரவேற்புள்ளதால், மேலும் விலை உயர வாய்ப்புள்ளது.

**தொடர் மழையால் எள் அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2011,02:37 IST

கோபிசெட்டிபாளையம்: தொடர் மழையால் எள் அறுவடை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் பவானி, அந்தியூர், அம்மாபேட்டை பகுதிகளில் மானாவாரி இரவையில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த நீர் வசதி, 100 நாட்களில் அறுவடைக்கு தயாராவதால், அனைத்து தரப்பு விவசாயிகளும் எள் பயிரிடுகின்றனர். நடப்பாண்டு மானாவாரியில் எள் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராகி உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ஒரு மாதமாக பெய்த மழையால், எள்ளை அறுவடை செய்து, உலர வைக்க முடியாமல் உள்ளது. தொடர் மழையால் போதிய வெப்பம் இல்லாமல் வளர்ந்து அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ள எள் பயிரை அறுவடை செய்ய விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.வழக்கமாக நவம்பர் முதல் மார்ச் முடிய மானாவாரி எள் அறுவடை நடக்கும். மாவட்டத்தில் அதிகளவில் எள் வர்த்தகம் நடக்கும் மைலம்பாடி, அந்தியூர், பூதப்பாடி ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு எள் வரத்து மிகவும் குறைந்துள்ளது.நடப்பு வாரம் மைலம்பாடி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் அதிகபட்சம் கிலோ 62 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 56 ரூபாய்க்கும் எள் விற்பனை செய்யப்பட்டது. வரும் காலங்களில் மழை குறைந்து, வெயில் அடிக்கும் நிலையில் எள் அறுவடை அதிகரித்து, வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திடக்கழிவு மேலாண்மை மையம் வேளாண் பல்கலையில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,22:13 IST

கோவை:""விவசாயிகளின் உழைப்பும், உற்பத்தியும் இல்லாமல் இந்தியா ஜொலிக்க முடியாது. விவசாய மறுமலர்ச்சிக்கு கிராமங்களுக்கு உயிரோட்டம் தரவேண்டும்,'' என, மாநில திட்டக்குழு உறுப்பினர் ராமசாமி பேசினார்.கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலையில் திடக்கழிவு மேலாண்மை மையம் துவங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில், பல்கலையில் கிடைக்கும் திடக்கழிவுகளை "கம்போஸ்ட்' தொழில்நுட்பம் மூலம் மக்க வைத்து உரமாக்கப்படுகிறது. மக்கும் கழிவுகள், மக்கா கழிவுகள் தனித்தனியே பிரிக்கப்படுகிறது. மக்கும் கழிவுகள் அனைத்தும் தூளாக்கும் இயந்திரம் மூலம் சிறு துகள்களாக மக்க வைக்கப்படுகிறது.

மக்கிய உரம் சலித்து எடுக்கப்படுகிறது.
மாநில திட்டக்குழு உறுப்பினர் ராமசாமி துவக்கி வைத்து பேசியதாவது:விவசாயத்தில் ஒரு கிலோ தானியம் உற்பத்தி செய்யப்படுமெனில், இலை, தண்டு என மூன்று கிலோ கழிவுகளாக ஒதுக்கப்படுகின்றன. இக்கழிவுகளை மீண்டும் நிலத்துக்கு பயன்படுத்தும் வகையில், அவற்றை மக்கச்செய்து உரமாக இட தமிழ்நாடு வேளாண் பல்கலை முன்மாதிரி சுத்திகரிப்பு வழிவகைகளை கண்டறிந்துள்ளது.அனைத்து மாநகரம் மற்றும் நகர கழிவுகளை சேமித்து, மக்கச்செய்து அவற்றை உரமாக பயன்படுத்த இந்த முன்மாதிரியை எடுத்துக்கொள்ள வேண்டும். மறு சீரமைப்பு செய்து மக்கிய உரமாகவும், மண் புழு உரமாகவும் தயாரிக்கலாம். கரிம பொருட்களை சேர்த்தால் மண் வளம் கூடும். விவசாயிகளுக்கு இடுபொருள், செய்பொருள், இயந்திரம் தர அரசு தயாராக

உள்ளது. விவசாயிகளின் உழைப்பும், உற்பத்தியும் இல்லாமல் இந்தியா ஜொலிக்க முடியாது. விவசாய மறுமலர்ச்சிக்கு கிராமங்களுக்கு உயிரோட்டம் தரவேண்டும்.இவ்வாறு, ராமசாமி பேசினார். வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி, சுற்றுச்சூழல் விஞ்ஞானி சுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காய்கறி பதப்படுத்த பல்கலையில் பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,22:11 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை:தமிழ்நாடு வேளாண் பல்கலையில் காய்கறிகளை பதப்படுத்தல் குறித்த இரண்டுநாள் பயிற்சி, வரும் டிச. 7,8 ல் நடக்கிறது.வேளாண் பல்கலை வெளியிட்ட அறிக்கை:உலர வைக்கப்பட்ட காய்கறிகள், ஊறுகாய், மிட்டாய், தயார்நிலை உணவுகள், கெட்சப் தயாரித்தல் போன்றவை கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி கட்டணமாக ஆயிரம் ரூபாய் செலுத்தி பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.நேரில் வந்து பதிவு செய்ய முடியாதவர்கள், பயிற்சி கட்டணத்தை முதன்மையர், வேளாண்மை பொறியியல் கல்லூரி எனும் பெயரில் கோவையில் உள்ள பாரத ஸ்டேட் பாங்கில் பெறத்தக்க வகையில் வரை ஓலை எடுக்க வேண்டும். பின், டிச., 5ம் தேதிக்குள் பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை - 641003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**உரம் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,23:31 IST

கருத்தை பதிவு செய்ய

சாயல்குடி : சாயல்குடி, கடலாடி, சிக்கல் பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து சாகுபடி பணியை துவக்கி உள்ளனர். கடன் வாங்கி களை எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கூட்டுறவு வேளாண் வங்கிகளில் உரம் இல்லை. தனியார் கடைகளில் யூரியா ஒரு மூடை, ரூ 400- 450 வரை விற்கப்படுகிறது. இவ்வளவு விலை கொடுத்து வாங்க விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். கூட்டுறவு வேளாண் வங்கிகளில் உரம் இருப்பு வைக்க வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**உழவர் பாதுகாப்பு திட்ட உதவித்தொகை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,23:25 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உழவர் அடையாள அட்டை வைத்துள்ள உறுப்பினர்களின் குழந்தைகளில் அரசு மற்றும் அரசு சார்ந்த கல்லூரிகள், சட்டம், மருத்துவம், பொறியியல், கால்நடை அறிவியல் மற்றும் வேளாண் தொழில்கல்வி நிறுவனங்கள், கவின்கலை, ஆசிரியர் மற்றும் செவிலியர் பயிற்சி நிறுவனங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயில்பவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட உள்ளது.

மற்ற துறையில் கல்விக்காக நிதி உதவி பெற்றாலும், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை கூடுதலாக வழங்கப்படும். இதற்கு, அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகங்களில் உள்ள சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தாரிடம் விண்ணப்பிக்கலாம்.

**தண்ணீரின்றி கருகுது நெல் : கண்ணீரில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2011,23:30 IST

கருத்தை பதிவு செய்ய

முதுகுளத்தூர் : முதுகுளத்தூரில் போதிய மழையின்றி நெல் பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

வானம் பார்த்த பூமியை மட்டும் நம்பி ஒருபோகம் விவசாயம் செய்து வரும் முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஆகிய பகுதிகளில் இந்தாண்டு போதிய மழை பெய்யவில்லை. நெல் பயிரிட்ட விவசாயிகள், சில வாரத்திற்கு முன் பெய்த சிறுமழையை நம்பி நெல் பயிருக்காக களைக்கொல்லி மருந்துகளை தெளித்தனர். அதன்பின்னரும் மழை பெய்யாததால் பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் கோடை கால பயிர்களான பருத்தி, மிளகாயை ஊடுபயிராக விதைத்து வருகின்றனர். விவசாயிகள் சிலர் கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை செப்டம்பரில் துவங்கும், ஆனால் இந்த ஆண்டு பெய்யவில்லை. கண்மாய்களில் தண்ணீர் இல்லாமலே, அவ்வப்போது பெய்த சிறுமழையை நம்பி நெல் விவசாயத்திற்கு உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் இட்டோம். உரம், பூச்சிகொல்லி விதைப்புக்கு பின் போதிய தண்ணீர் இல்லாததால், பயிர்கள் அழிந்து வருகின்றன. கடலில் வீணாக கலக்கும் நீரை பயன்படுத்த வரத்துக்கால்வாய்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.